
### ஆத்தூர் - ரெட்டியார் சத்திரம் ஒன்றியங்களில் - ரூ.90 கோடியில்

# கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான கட்டிடப் பணிகள்!

## அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு மாணவர்கள் பாராட்டு!

திண்டுக்கல்,மே 29-

ஆத்தூர் தொகுதியில் இரண்டு கலை கல்லூரிகள் கொண்டு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு மாணவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். ஆத்தூர் ஒன்றியத்தில் ரூ.77 கோடி மதிப்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் ரூ.13 கோடி மதிப்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் கொண்டு வரப்பட்டு கட்டிடப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பாக 1989ம் ஆண்டு போட்டியிட்ட ஐ.பெரியசாமி அவர்கள் இன்று வரை (2023) ஒரே தொகுதியில் போட்டியிட்டு வருகிறார். வீட்டு வசதி துறை, சிறைத்துறை, மற்றும் வருவாய்துறை, பத்திர பதிவுத் துறை, அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ.பெரியசாமி 2021ம் வருடம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தமிழக சட்டமன்ற வரலாற்றிலே யாரும் பெறாத அளவிற்கு 1லட்சத்து 35 ஆயிரத்து 571 வாக்குகள் கூடுதலாக பெற்று சட்டமன்றத் தேர்தலில் தனி முத்திரை பதித்தார்.

அவருக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சரவையில் கூட்டுறவு மற்றும் பத்திரப் பதிவு துறை அமைச்சராக பதவி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கூட்டுறவு துறை அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் வசிக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் நலன் கருதி எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தினார். குறிப்பாக கிராம புறங்களில் உள்ள நடுநிலை மற்றும் உயர்நிலைபள்ளிகளை தரம் உயர்த்தி மேல்நிலை பள்ளிகளாக கொண்டு வந்தார். இதன் மூலம் பள்ளி படிப்பு படிக்கும் மாணவர்களின் தரம் உயர்ந்தது. அதன்பின்னர் ஆத்தூர் தொகுதியில் வசிக்கும் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி படிப்பதற்காக திண்டுக்கல், நிலக்கோட்டை, பழனி செல்வதை அறிந்த கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழகத்தில் முதன்முறையாக கூட்டுறவு துறை சார்பாக கூட்டுறவு துறை கலை மற்றும அறிவியல் கல்லூரியை சீவல்சரகு ஊராட்சிக்கு உட்பட்ட சுதனாகியபுரத்தில் கொண்டு வந்தார். இது போல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ரெட்டியார்சத்திரத்திற்கும் கொண்டு வந்தார்.

ஆத்தூர் ஒன்றியத்தில் கூட்டுறவு துறை சார்பாக ரூ.77 கோடி மதிப்பில் சுமார் 8 ஏக்கர் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கல்லூரி சென்னையில் உள்ள ஐ.டி.பார்க் போல் அமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கல்லூரியில் நிர்வாக அலுவலகம், ஆசிரியர்கள் ஓய்வறை, மாணவர்களுக்கு 40 வகுப்பறைகள், கணிணி லேப், பிரம்மாண்டமான நூலகம், வேதியியல், இயற்பியல், உயிரியலுக்கான ஆய்வகங்கள், கல்லூரி மாணவர்கள் ஆயிரம் பேர் அமரக் கூடிய மிகப் பிரம்மாண்டமான உள்ளரங்கம், மாணவர்கள் விளையாட சிறந்த விளையாட்டு மைதானத்துடன் கட்டப்பட்டு வருகிறது. கட்டிட பணிகள் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து நடைபெற்று தற்போது பூர்த்தி அடைந்து ஒரு மாத காலத்திற்குள் திறப்பு விழா காண இருக்கிறது.

இதுபோல ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் ரூ.13 கோடி மதிப்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டு வரப்பட்டு கட்டிடப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. கல்லூரியின் மேல்தள பணிகள் நடைபெற்று வரும் நிலையில் விரைவாக கட்டிடப் பணிகள் பூர்த்தியடைந்து திறப்பு விழா காண இருக்கிறது.

ஆத்தூர் தொகுதியில் மாணவர்களின் நலன் கருதி இரண்டு கல்லூரிகளை கொண்டு வந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராமப்புற கல்லூரி மாணவர்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்து வருகின்றனர். இது குறித்து ஆத்தூர் தொகுதியை சேர்ந்த மாணவ மாணவியர்கள் முருகேசன் மற்றும் பூங்கொடி கூறுகையில் ஆத்தூர் தொகுதிக்கு பெருமை சேர்க்கும் விதமாகவும், எங்கள் கல்வி மேம்படுத்தும் விதமாகவும், அமைச்சர் பெரியசாமி ஐயா அவர்கள் எங்கள் பகுதியில் ரூ.77 கோடி மதிப்பில் பிரம்மாண்டமான முறையில் தனியார் கல்லூரியை மிஞ்சும் அளவிற்கு புதிய கட்டிட வசதியுடன் கல்லூரியை கட்டி தந்துள்ளார். இது தவிர எங்கள் பெற்றோர்களின் சுமைகளை குறைக்க கல்வி கட்டணத்தையும் பருவ தேர்விற்கான கட்டணத்தையும் அமைச்சர் ஐ.பெரியசாமி ஐயா அவர்களே கடந்த மூன்று ஆண்டுகளாக கட்டி வருகிறார். இது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்துள்ளது ரூ.300 செலவில் எங்கள் கல்லூரி படிப்பை நாங்கள் முடித்து கொள்வோம் என்றனர்.

மாணவர்களின் பாராட்டுகள் குறித்து ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கேட்டபோது நான் கூட்டுறவு துறை அமைச்சராக இருந்த போது தமிழகத்திலே முதல் கூட்டுறவு துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொண்டு வந்தேன்.

கல்லூரியை ஆத்தூர் ஒன்றியத்திற்கு கொண்டு வந்த சீவல்சரகு ஊராட்சியில் அமை வதற்கு காரணம் அந்த ஊராட்சியை சுற்றியுள்ள 8க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் வசிக்கும் மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளனர். ஒரு சில மாணவர்கள் காலையில் 4 மணிக்கு எழுந்து பூப்பறிக்கும் வேலைக்கு சென்று விட்டு அதன்பின்பு பள்ளிக்கு செல்வதை பார்த்திருக்கிறேன்.

இந்த கல்லூரியை (சீவல் சரகு ஊராட்சி) இப்பகுதியில் அமைத்தால் இதனை சுற்றியுள்ள ஆத்தூர். வீரக்கல், வக்கம்பட்டி, முன்னிலைக்கோட்டை, என்.பஞ்சம்பட்டி, காந்தி கிராமம், அம்பாத்துரை, தொப்பம்பட்டி, செட்டியபட்டி, போடி காமன்வாடி, எஸ். பாறைப்பட்டி, அக்கறைப்பட்டி, மற்றும் சி;ன்னாளபட்டி பேரூராட்சி, சித்தையன்கோட்டை பேரூராட்சியை சேர்ந்த ஏழை மாணவர்கள் மற்றும் கைத்தறி நெசவு தொழிலாளர்களின் பிள்ளைகள் பயன் பெறுவார்கள் என்ற அடிப்படையில் கல்லூரியை கொண்டுவந்துள்ளோம். இந்த கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் நவீன வசதியுடன் கூடிய அரசு கல்லூரியில் படிக்கிறோம் என்பதை உணர்வார்கள் என்றதோடு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதியில் உள்ள மாணவர்களின் நலன் கருதி ரெட்டியார்சத்திரத்திலும் ரூ.13 கோடி மதிப்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டு கட்டிடப்பணிகள் பூர்த்தி அடைந்து வருகின்றன.

விரைவில் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்பட உள்ளது என்றார்.

---

### மதுரையில் வரலாறு படைக்கும் வகையில்

# கழக பொதுக்குழு கூட்டத்திற்கான பிரம்மாண்டமான ஏற்பாடுகள் தீவிரம்!



மதுரை, மே 29-

மதுரையில் வரும் 1ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க கழகப் பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார், அதனை தொடர்ந்து பிரம்மாண்டமாக, வரலாற்று புகழ் பெறும் வகையில் இந்தியாவில் இதுபோல் எந்த ஒரு பொதுக்குழு கூட்டமும் நடைபெறவில்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பல்வேறு புதிய கலை நுணுக்கத்துடன் சிறப்பு அம்சங்களுடன் இரவு பகலாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கண்காணிப்பில் சிறப்பாக செய்து வருகின்றனர். அதன் விபரம்

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை பொதுக்குழு கூட்டம் தமிழ்நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கக்கூடிய சக்தியாக அமையும் என்ற எதிர்பார்ப்புகளுடன் மதுரையில் உள்ள உத்தங்குடி கலைஞர் திடலில் பொதுக்குழு கூட்டம் நடத்த தீர்மானித்தார்.

அதன்படி பொதுக்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மேற்கொண்டு வருகிறார். பிரமாண்டமாகவும், இது வரையில் இது போன்று வேறு எங்கும் அமைந்திடாத வகையில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய பிரம்மாண்டமான பொதுக்குழு கூட்ட அரங்கம் பிரத்தியேக கலை நுணுக்கத்துடனும் பொதுக்குழு அரங்கில் வண்ண விளக்குகளுடன் அமைகிறது.

அதற்கு அருகில் பொதுக்குழுவில் பங்கேற்க வரும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எளிதில் பொதுக்குழு அரங்கிற்குச் செல்லும் வகையில் சுமார் 13க்கும் மேற்பட்ட அரங்கம் அமைத்து அங்கு வைக்கப்பட்டுள்ள மாவட்ட பெயர்கள் பார்த்து பதிவு செய்து எளிதில் அனுமதி பெற்று பொதுக்குழு அரங்கிற்குள் உள்ளே செல்ல வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கு அடுத்தபடியாக மாபெரும் அரங்கில் பொதுக்குழுவில் பங்கேற்றவர்கள் மதுரை மாவட்டத்திற்கு உரித்தான அமைச்சர் பி.மூர்த்தியின் வழக்கம் போல் ஏற்பாடு செய்யும் பல்வேறு உயர்ரக சைவ, அசைவ வகை உணவுகள், மதுரை ஜிகர்தண்டா, சோழவந்தான் கொழுந்து வெற்றிலை பீடா என என்றும் மதுரை மண்ணின் உணவுகள் மனதில் நிலைத்திருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

பொதுக்குழு அரங்கத்திற்கு முன்பாக கழகத் தலைவர், முதல்வர் அவர்களால் இரு வண்ணக் கொடி ஏற்றும் வகையில் 100 அடி உயர கம்பம் கம்பீரத் தோற்றத்தில் அமைய உள்ளது,

பொதுக்குழு அரங்கின் முன்பாகவும், 100 அடி கொடிக்கம்பம் சுற்றியும் முகப்பு தோற்றம் முழுவதும் பசுமையான புல்வெளிகள், பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களால் அலங்காிக்கப்பட்டு வருகின்றது

மேலும் எல்லோர் பார்வையும் ஈர்க்கும் வகையில் செயற்கை நீரூற்று அமைக்கும் பணியும் நடை பெற்று வருகின்றது. மதுரை முழுவதும் சுமார் 60 கிலோ மீட்டர் சுற்றளவில் சாலையின் இரு புறங்களிலும் இரு வண்ணக் கொடி திராவிட மாடல் ஆட்சியின்பெருமையை கூறும் வகையில் பட்டொளி வீசி எல்லோரையும் கவரும் வகையில் அமைய உள்ளது.

பொதுக்குழுவில் பங்கேற்க வருபவர்கள் எளிதில் வந்து செல்ல ஏதுவாக சாலை மற்றும் போக்குவரத்து வசதி மற்றும் நடமாடும் கழிப்பறை வசதி, வாகனங்கள் போதுமான அளவுக்கு நிறுத்தும் வகையில் பார்க்கிங் வசதி என இதுவரை யாரும் காணாத வகையில் இனிமேல் இது போன்று அமையுமா என எல்லோரும் ஆச்சரியத்துடன் கூறும் வகையில் பொதுக்குழு மற்றும் மாபெரும் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கான வரவேற்பு ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் பணிகள் 90 சதவீதம் முடிந்துள்ளது.

விரைவில் முழுமை பெற்று காண்போர் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் இப்பொதுக்குழு கூட்டம் தமிழ்நாட்டின் உச்சத்தை தொட்டு வரும் 2026 தேர்தல் முழு வெற்றிக்கு மாபெரும் உந்து சக்தியாக அமையும் என்பதில் மாற்றமில்லை.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை மக்கள் விழாவாக

# புதுச்சேரி மாநிலம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படும்!

## மாநில தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

புதுவை, மே 29 -

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில கழக அவைத் தலைவர் எஸ். பி.சிவக்குமார் தலைமை வகித்தார். மாநில கழக துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., அ. தைரியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவாதீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே. எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், ப. செல்வநாதன், ந. தங்கவேலு, பெ. வேலவன், ஆர். கோகுல், ப. இளம்பரிதி, பெ. பழநி, ஆர். ரவீந்திரன், எஸ். எஸ். செந்தில்குமார், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், ஜெ. வேலன் தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், வ. சீத்தாராமன், கோ. தியாகராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சி. சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, விவசாய அணி வெ. குலசேகரன், ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், மீனவராணி ந. கோதண்டபாணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தொமுச அண்ணா அடைக்கலம், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, வர்த்தகர் அணி சு. ரமணன், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மருத்துவர் அணி ஆனந்து ஆரோக்கியராஜ் அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், வர்த்தகர் அணித் தலைவர் செல்வா, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் நித்திஷ் நிமோத்தி, முகிலன், ரெமிஎட்வின், ஆளவந்தார், சிவதாசன், சிவசுப்ரமணியன் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-**

• முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நூற்றாண்டு நிறைவு விழாவை நாம் எப்படி சீரும், சிறப்புமாக கொண்டாடி மகிழ்ந்தோமோ அதே வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாள் விழாவை, புதுச்சேரி மாநிலம் முழுவதும் கழகத் தொண்டர்களின் குடும்ப விழாவாக - மக்கள் விழாவாக கோலாகலமாக கொண்டாடுது என்று இக்கூட்டம் முடிவு செய்கிறது.

• முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, ஜூன் 3-ஆம் தேதி காலை 09.00 மணியளவில் புதுச்சேரி மாவட்டம் முழுவதும் தொகுதிதோறும் அனைத்து கிளைகளிலும் கழக கொடி - தோரணங்களைகட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றிய எழுச்சியான பேச்சுகளை ஒலிபரப்பி, அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை வைத்து கழக இரு வண்ணக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்குவது என்றும், புதுச்சேரியில் உள்ள முதியோர் இல்லம் - கருணை இல்லம் - பார்வையற்றோர் பள்ளி - மனநலம் குன்றியோர் பள்ளிகளில் அன்று அறுசுவை உணவு வழங்குவது என்றும் இந்த மாதம் முழுவதும் இரத்த தான முகாம்கள் - மருத்துவ முகாம்கள் நடத்துவது என்றும் மரக்கன்றுகள் நடுதல், ஏழை, எளியோர்க்கு நலத்திட்டம் வழங்குவது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

• நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாக கழக ஆட்சி தமிழகத்தில் அமையவும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்கவும் கழகத் தலைவர் காட்டும் வழியில் புதுச்சேரி மாநில கழகம் பயணிப்பது என்றும் அதே வழியில் தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சியை புதுச்சேரியிலும் நம் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் அமையவும் நாம் அயராது பாடுபட உறுதியேற்பது என்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

• எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை தனது (ஏஜெண்டுகள்) ஆளுநர்கள் மூலம் முடக்கி வரும் ஒன்றிய அரசு தமிழ்நாடு திராவிடமாடல் ஆட்சியின் பத்திற்கும் மேம்பட்ட சட்டமன்ற தீர்மானங்களை ஜனநாயக மரபுக்கு மாறாக தடுத்து வைத்த ஆளுநரின் அடாவடியை உச்சநீதிமன்ற போராட்டத்தால் உடைத்தெரிந்து இந்திய வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் தளபதியாரின் வீரமிகு வெற்றியை இச்செயற்குழு பாராட்டுகிறது.

• கொள்கை ரீதியாகவும், செயல்பாட்டு ரீதியாகவும் ஒன்றிய அரசோடு முரண்பட்டு நின்றாலும், நாட்டின் இறையாண்மை மீது நிகழ்த்தப்படும் பகல்காம் தீவிரவாத படுகொலையைக் கண்டித்து இந்திய இராணுவத்திற்கு பலம் சேர்க்கும் விதத்தில் மிகப் பெரிய பேரணியை நடத்திக்காட்டியதுடன், ஒன்றிய அரசு இந்திய அரசின் சார்பில் உலக நாடுகளுக்கு அனுப்பிய தூதுக்குழுவின் ஒரு குழுவிற்கு கழகத்தின் துணைப் பொதுச் செயலர் கனி மொழி கருணாநிதி அவர்களை தலைமை ஏற்க வைத்து ரஷியா போன்ற நாடுகளில் நமது நாட்டின் தீவிரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துரைக்கச் செய்த கழகத் தலைவர் தளபதியாரின் நாட்டுப்பற்றில் நாங்கள் சலைத்தவர்களில்லை என்ற எடுத்துக்காட்டிற்கு இக் கூட்டம் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---


### பொதுமக்கள் பயன்பெறும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி இன்றியமையாதது!

# இதன்மூலம் அரசியல் ஆதாயம் பெற நினைப்பது மோசமான அரசியல்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 29 -

பொதுமக்கள் பயன் பெறும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி இன்றியமையாதது. இதன்மூலம் அரசி யல் ஆதாயம் பெற நினைப்பது மோசமான அரசியல் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.




இது குறித்து 27.5.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடியின் தலைமையிலான ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவது இல்லை. தொடர்ந்து பாராமுகம் காட்டி வருகிறது. கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழகத்தை பெஞ்சல் புயல் தாக்கியது. 18 மாவட்டங்களின் விவசாயிகளுக்கு ரூ.4988 கோடி நிவாரண நிதியை தமிழ்நாடு அரசே வழங்கியது. முன்னர் 2023ம் ஆண்டு மிக் ஜாம் புயலுக்கும் ஒன்றிய அரசு நிவாரணம் வழங்கவில்லை. மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் கல்வி நிதியை வழங்க முடியும் என்று கூறி தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.2,291 கோடி நிதியை ஒன்றிய அரசு தர மறுக்கிறது. தற்போது உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்து உள்ளது. 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் ரூ.4 ஆயிரத்து 34 கோடி நிதியை வழங்கவில்லை.

எஸ்சி, எஸ்டி மேம்பாட்டு நிதி நிறுத்தம், ரயில்வே திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக் கீடு, தொழில்துறை மானியம் குறைப்பு, நகர்ப்புற மேம்பாட்டு நிதி குறைப்பு, சிறுபான்மையினர் நலத் திட்டங்களுக்கு நிதி குறைவாக ஒதுக்கீடு செய் யப்படுகிறது. ஆர்டிஇ சட்டத்தின் கீழ் 25 சதவீத ஒதுக்கீட்டுக்கான மாணவர் சேர்க்கை இந்தாண் டுக்கு இதுவரை தொடங்கவில்லை. 2021 முதல் 2023 கல்வியாண்டு வரை எந்த நிதியையும் ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை. முழு நிதியையும் மாநில அரசே செலுத்தியுள்ளது. தமிழகத்துக்கான கல்வி நிதியை ஏன் ஒதுக்கவில்லை என ஒன்றிய அரசை நீதிபதிகள் கண்டித்துள்ளனர். தொடர்ந்து தமிழ்நாட்டை ஒன்றிய அரசு புறக்கணித்து வருவதால் டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். பின்னர் பிரதமர் மோடியை தனியாக சந்தித்து பேசினார். அப்போது சென்னை 2ம் கட்ட மெட்ரோ திட்டம், கோவை, மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு நிதி, கோவையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க வேண்டும். நிலுவையில் உள்ள நெடுஞ்சாலை திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும். சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் கல்வி நிதியை வழங்க வேண்டும். இலங்கை சிறைபிடித்துள்ள தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை மீட்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்தது தமிழ்நாட்டில் உள்ள ஒரு சில கட்சி களுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்டு இருந்தால் தமிழ்நாட் டிற்கு தேவையான நிதியை பெற்று இருக்கலாம்.

புதிய திட்டங்களுக்கு அனுமதி கிடைத்து இருக்கலாம். மாநிலம் சார்ந்த பிரச்சினை களை தெரிவித்து இருக்கலாம் எனக்கூறுகின்றனர். பா.ஜ. கூட்டணியில் இருந்து வெளியேறியதும், தமிழ் நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதி, திட்டங்களில் ஒன்றிய அரசின் பாரபட்சம் குறித்து அறிக்கை, பேட்டி அளித்து எதிர்க்கட்சி தலைவர் குற்றம் சாட்டியிருந்தார். இப்போது மீண்டும் பா.ஜ.வுடன் கூட் டணி அமைத்தபிறகு, ஒன்றிய அரசுக்கு ஆதரவாக பேசத் தொடங்கியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் மற்றும் பொதுமக்கள் கருதுகின்றனர்.

ஒன்றிய அரசுக்கு வரியாக தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் நமக்கு 29 பைசா தான் திரும்பக் கிடைக்கிறது. பா.ஜ. ஆளும் மாநிலங்கள் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 2.73 ரூபாய் திரும்பக் கிடைக்கிறது. பொதுமக்கள் பயன்பெறும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி இன்றியமையாதது. தொழில்துறை உள்பட பல் வேறு துறை களில் தமிழ்நாடு முன்னேறி வருகிறது. இதன்மூலம் ஆளும் தமிழ்நாடு அரசுக்கு நற்பெயர் கிடைத்துவிடக் கூடாது. ஒன்றிய அரசு, நிதி வழங்கக் கூடாது. பல்வேறு திட்டங்கள் முடங்க வேண்டும். இதன்மூலம் அரசியல் ஆதாயம் பெற நினைப்பது மோசமான அரசியலை தான் சுட்டி காட்டுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.